பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
31 12 2025 WEDNESDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்ய, பல்வேறு துறைகளிலும் காலக்கெடு நிர்ணயித்து சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டப் பணிகளை, விரைந்து முடிக்குமாறு, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
- தோட்டக்கலை துறையின் செயல்பாடுகளை முடக்க, திமுக அரசு முயற்சிப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.
- புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒட்டி, சென்னை, மாமல்லபுரம் உள்ளிட்ட இடங்களில் காவல்துறை பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது
- இலங்கைக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 15 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

>>>>>>><<<<<<<

நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்ய, பல்வேறு துறைகளிலும் காலக்கெடு நிர்ணயித்து சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படவிருப்பதையொட்டி, புதுதில்லியில் பொருளாதார நிபுணர்களுடன் கலந்துரையாடிய அவர், இந்த சீர்திருத்தங்கள், இந்தியாவை உலக அளவில் திறன்வாய்ந்த நாடாக உருவாக்குவதுடன், உலகளாவிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான தொலைநோக்கிற்கு ஏற்ப, அரசின் கொள்கைகள், மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

உலக அளவில் திறன்வாய்ந்த தொழிலாளர்களைக் கொண்ட நாடாக இந்தியாவை மாற்றுவதோடு, சர்வதேச சந்தையில் இந்தியத் தயாரிப்புகள் இடம்பெறுவதை உறுதி செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

குடும்ப அளவிலான சேமிப்புகளை அதிகரிக்கச் செய்தல், விரிவான கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலம், கட்டமைப்பு மாற்றத்தை விரைவுபடுத்த தீவிர கவனம் செலுத்துமாறும் பிரதமர் அறிவுறுத்தினார்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டப் பணிகளை, விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவருமாறு, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொழில் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் பொதுப்பணித்துறை உள்ளிட்ட 6 துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து, தலைமைச் செயலகத்தில், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களுடன் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

சிவகங்கை மினி டைடல் பூங்கா, சூலூர் பாதுகாப்பு உபகரண உற்பத்திப் பூங்கா, ஒரகடம் மருத்துவ சாதனங்கள் பூங்கா மற்றும் கோவை பொது பொறியியல் வசதி மைய பணிகளை, வரும் பிப்ரவரி மாதத்திற்குள் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

உடன்குடி அனல் மின் திட்டத்தின் முதலாவது பிரிவை, வரும் ஜனவரி மாதத்திற்குள் முடித்து, கோடை காலத்தில் சீரான மின்சார வினியோகத்தை உறுதி செய்யுமாறும் அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<

விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை, வேளாண் துறை அதிகாரிகள் கிராமங்களுக்கே சென்று ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தின் படி, அதிகாரிகள் வாரத்தில் 3 நாட்கள் கிராமங்களுக்குச் சென்று, பயிர் பாதிப்புகளை ஆய்வு செய்து, விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்து வருவதாக கூறினார்.

பின்னர், வெள்ளிக்கிழமைகளில் அந்தந்த அலுவலகங்களில் புகார்கள் மீதான நடவடிக்கை மற்றும் விளக்கங்களை அளிப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் குறிப்பிட்டார்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசின், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்தால், மாநில அரசுக்கான அதிகாரம் எதுவும் குறைக்கப்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், இந்த திட்டம் குறித்து திமுக அவதூறு பரப்பி வருவதாக தெரிவித்தார்.

திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில், மத்திய அரசு அதனை செயல்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இயக்கத்தின் படி, தொழிலாளர்களுக்கான சம்பளத்தை 15 நாட்களுக்குள் வழங்க வகை செய்யப்பட்டிருப்பதையும் திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<<

தோட்டக்கலை துறையின் செயல்பாடுகளை முடக்க, தமிழகத்தை ஆளும் திமுக அரசு முயற்சிப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வேளாண் நிபுணத்துவ சேவைகள் சிறு குறு விவசாயிகளுக்கு கிடைக்க முடியாத வகையில் உழவர் அலுவலர் தொடர்பு திட்டத்தைக் கொண்டுவர மாநில அரசு முயற்சிப்பதாக தெரிவித்துள்ளார்.

அரசின் பல்வேறு குளறுபடிகளால், தோட்டக்கலைத் துறையில் 141 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு நடைபெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தோட்டக்கலைத்துறை அலுவலர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையிலான நடவடிக்கைகளை அரசு கைவிட வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<<

2026 புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒட்டி, சென்னை மாநகரில் 19 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக மாநகர காவல் துறை தெரிவித்துள்ளது.

கடற்கரை, வழிபாட்டு தலங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் காவல்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றிரவு 9 மணி முதல் நகரில் 425 இடங்களில் வாகன தணிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

*மெரினா, சாந்தோம், எலியட்ஸ் மற்றும் நீலாங்கரை உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகளில், பொதுமக்கள் கடலில் இறங்கவோ, குளிக்கவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.*

*நட்சத்திர விடுதிகள் மற்றும் மனமகிழ் மன்றங்களில் நடைபெறும் புத்தாண்டு கொண்டாட்டங்களில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, மது அருந்த அனுமதிக்கப்பட்ட இடங்களில் குழந்தைகளை அனுமதிக்கக்கூடாது என்றும் காவல்துறை அறிவுறுத்தியுள்ளது.*

*இதேபோன்று, செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் மற்றும் கிழக்கு கடற்கரை சாலை பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - சுரேகா 39 செகண்ட்ஸ்)*

*நீலகிரி மாவட்டம், முதுமலை காப்பக பகுதிகளில், பட்டாசு வெடித்தல் மற்றும் வனவிலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படும் செயல்களில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஈடுபட வேண்டாம் என்று வனத்துறை அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - சரவணன் 49 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<<*

*இருவரிச் செய்திகள்*

*ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினின் இல்லம் மீது, யுக்ரைன் தாக்குதல் நடத்தியதை அடுத்து, அந்நாட்டுடனான பேச்சுவார்த்தைகளில் கடுமையான நிலைப்பாட்டை மேற்கொள்ள ரஷ்யா முடிவு செய்துள்ளது.*

*>>>>>><<<<<<<*

*ஏமன் நாட்டில், சவுதி அரேபியா நடத்திய தாக்குதலை அடுத்து, அந்நாட்டில் நிறுத்தப்பட்டுள்ள தங்களது படைகளை முழுமையாக திரும்பப் பெறுவதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அறிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<<*

*பலுசிஸ்தான் விடுதலை அமைப்பினர் நடத்திய தாக்குதலில், பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் 10 பேர் கொல்லப்பட்டனர்.*

*>>>>>><<<<<<<*

படுக்கை வசதியுடன் கூடிய வந்தேபாரத் ரயில் சோதனை ஓட்டம், வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

தமிழக அரசின் இளைஞர் நலத்துறை, கூட்டுறவுத்துறை செயலர் உள்ளிட்ட உயரதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<<

மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில், அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம், கோவை மாவட்டம், சூலூரில் நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும், முனைவர் பட்ட மாணவர் சேர்க்கை ஒற்றைச்சாளர முறையில் கொண்டுவரப்படும் என்று தமிழ்நாடு உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் திரு. விஜயகுமார் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்து, கண்காணிப்பு அலுவலர் திருமதி. லஷ்மி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் கோவை கிளை சார்பில், ஆயுஷ் கண்காணிப்பு மையங்களுக்கான தர நிலையாக்க செயல்முறை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

>>>>>>><<<<<<<

அரசு கேபிள் டி.வி நிறுவனத்தால் நடத்தப்படும் இ-சேவை மற்றும் ஆதார் சேவை மையங்களில் பராமரிப்புப் பணி நடைபெறவுள்ளதால், இன்றும் நாளையும் இந்த மையங்கள் செயல்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்தி

இலங்கைக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 15 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை முழுமையாக கைப்பற்றியது.

*திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இந்திய அணி, 7 விக்கெட் இழப்புக்கு 175 ரன் எடுத்தது.*

*176 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இலங்கை அணி, 160 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*>>>>>>END<<<<<<<<*